அப்துல் கலாம் ஜெயந்தி கொண்டாட வலியுறுத்தல்

குண்டல்பேட்டை வட்டாட்சியரிடம் மனு அளிக்கும் கர்நாடக காவல் படை நிர்வாகிகள்.

கூடலூர், அக். 17: அப்துல் கலாம் பிறந்த நாளை அப்துல் கலாம் ஜெயந்தி என்று கொண்டாட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக-கர்நாடக எல்லையோரப் பகுதி பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நீலகிரி மாவட்டம், கூடலூரை அடுத்துள்ள தமிழக-கர்நாடக எல்லையில் உள்ள கர்நாடக கிராம மக்கள், காந்தி ஜெயந்தியை அரசு விழாவாகக் கொண்டாடுவதுபோல, மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் பிறந்த நாளை அப்துல் கலாம் ஜெயந்தி என்ற பெயரில் அரசே கொண்டாட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசுக்கு மனு அளித்துள்ளனர். எல்லையோரப் பகுதியில் உள்ள கர்நாடக காவல் படை அமைப்பு சார்பில் காவல் படையின் குண்டல்பேட்டை தலைவர் அப்துல்மாலிக் தலைமையில் குண்டல் பேட்டை வட்டாட்சியரிடம் பொதுமக்கள் மனு அளித்துள்ளனர்.

வெங்கடேஸ்வரா கல்லூரியில் கருத்தரங்கு

கருத்தரங்கில் பேசுகிறார் ஈரோடு கோரல் மேனுபேக்சரிங் ஓர்க்ஸ் பராமரிப்புத் துறை தலைவர் மகேஷ் பாலசுப்பிரமணி.

கோபி, அக்.17: கோபி ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹை-டெக் பொறியியல் கல்லூரியில், இயந்திரவியல் துறை மற்றும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் புரொடக்ஷன் இன்ஜினியர்ஸ் சொசைட்டி இணைந்து காற்றில் இயங்கும் கார்களின் சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் என்ற கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இயந்திரவியல் துறை பேராசிரியர் பி.லிங்கேஸ்வரன் வரவேற்றார். கருத்தரங்கில் ஈரோடு கோரல் மேனுபேக்சரிங் ஓர்க்ஸ் பராமரிப்புத் துறை தலைவர் மகேஷ் பாலசுப்பிரமணி பங்கேற்று காற்றின் மூலம் இயங்கும் கார்களுக்கு பயன்படுத்தப்படும் பாகங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். கருத்தரங்கில் துறை சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் 120 மாணவர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இயந்திரவியல் துறை பேராசிரியர் த.மோகன்ராஜ் செய்திருந்தார்.

முதுமலை புலிகள் காப்பக முகாமில் குட்டி யானை உயிரிழப்பு

கூடலூர், அக். 17: முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமில் இருந்த குட்டியானை வியாழக்கிழமை உயிரிழந்தது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப் பகுதியில் தாயைப் பிரிந்து சுற்றித் திரிந்த பெண் குட்டி யானையை வனத் துறையினர் கடந்த மார்ச் மாதம் மீட்டு முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமுக்கு கொண்டு வந்தனர். இங்கு கால்நடை மருத்துவரின் மேற்பார்வையில் இந்தக் குட்டி யானை பராமரிக்கப்பட்டு வந்தது.

இந்தக் குட்டி யானையின் உடல்நலம் குன்றியதால் கடந்த ஒன்றரை மாதமாக அதற்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி 9 மாதங்களே ஆன இந்தக் குட்டி யானை வியாழக்கிழமை அதிகாலை 3 மணிக்கு உயிரிழந்தது.

தெப்பக்காடு யானைகள் முகாமில் உயிரிழந்த குட்டி யானை.

இதையடுத்து புலிகள் காப்பக கால்நடை மருத்துவர் ராஜேஷ்குமார், குட்டியின் சடலத்தை உடற்கூறாய்வு செய்து முக்கிய பாகங்களை ஆய்வக பரிசோதனைக்காக எடுத்து அனுப்பிவைத்தார். பின்னர் அதே பகுதியில் சடலம் எரியூட்டப்பட்டது.

முன்னதாக புலிகள் காப்பக துணை கள இயக்குநர் திவ்யா, வனச் சரக அலுவலர் மேகலா உள்ளிட்ட வன அலுவலர்கள் உயிரிழந்த குட்டி யானையின் சடலத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

தண்டவாளத்தில் விழுந்த பாறைகள் அகற்றம்: உதகை மலை ரயில் சேவை தொடக்கம்

உதகை, அக்.17: உதகை-குன்னூர் இடையே மலை ரயில் பாதையில் விழுந்த பாறைகள் அகற்றப்பட்டதால் மலை ரயில் சேவை வழக்கம் போல வியாழக்கிழமை மீண்டும் தொடங்கியது.

நீலகிரி மாவட்டம், உதகை, குன்னூர் பகுதிகளில் பெய்த மழை காரணமாக கேத்தி, லவ்டேல் பகுதியில் மலை ரயில் பாதையில் புதன்கிழமை பாறை விழுந்தது. இதனால் உதகை-குன்னூர் இடையே மலை ரயில் சேவை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் ரயில் பாதையில் விழுந்தது சிறிய பாறை என்பதால் ரயில்வே பணியாளர்கள் உடனடியாக அதை அகற்றி தண்டவாளத்தை சீரமைத்தனர். இந்தப் பணி நிறைவடைந்த நிலையில் வியாழக்கிழமை காலை முதல் வழக்கம் போல உதகை-குன்னூர் இடையே மலை ரயில் போக்குவரத்து மீண்டும் தொடங்கியது.

மூலனூரில் ரூ.38.64 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

வெள்ளக்கோவில், அக். 17: வெள்ளக்கோவிலை அடுத்த மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏலம் வியாழக்கிழமை நடைபெற்றது. திருப்பூர் மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் 538 குவிண்டால் பருத்தியை விற்பனைக்குக் கொண்டுவந்திருந்தனர்.

இதில், குவிண்டால் பருத்தி ரூ.6100 முதல் ரூ.8208 வரை விற்பனையானது. இந்த ஏலத்தில் மொத்தமாக ரூ.38.64 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது என்று விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சிவகுமார் தெரிவித்தார்.

கைத்தறி நெசவாளர்களுக்கு தாமதம் இன்றி முதியோர் ஓய்வூதியம் வழங்கக் கோரிக்கை

பெருந்துறை, அக். 17: கைத்தறி நெசவாளர்களின் ஓய்வூதியத்தை தாமதமின்றி வழங்கக் கோரி தமிழக முதல்வருக்கு ஈரோடு மாவட்ட கைத்தறி நெசவாளர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதிக்குள் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுவது வழக்கம். ஆனால், நடப்பு மாதத்தில் இது வரை ஓய்வூதியம் வழங்காமல் இருப்பதால் நெசவாளர்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஈரோடு மாவட்ட கைத்தறி நெசவாளர் சம்மேளனத் தலைவர் கே.எஸ்.பி.ராஜேந்திரன் கோரிக்கை மனுவை வியாழக்கிழமை அனுப்பியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

நெசவாளர்களுக்கு மாதந்தோறும் 5 ஆம் தேதி முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்ததால் அவர்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்து வந்தனர். ஆனால், தீபாவளி பண்டிகை நெருங்கும் நேரத்தில் நடப்பு மாதம் இதுவரை ஓய்வூதியம் வழங்கப்படாமல் உள்ளது. இதனால் இதை நம்பியுள்ள நெசவாளர்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகி உள்ளனர்.

எனவே, உடனடியாக ஓய்வூதியத்தை வழங்குவதோடு, இனிவரும் காலங்களில் தாமதமின்றி ஓய்வூதியம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஏழை நெசவாளர் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தையும் உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் கூறியுள்ளார்.

ரயில்களில் சிறப்பு சோதனை: ரூ.48.61 லட்சம் அபராதம் வசூல்

கோவை, அக். 17: சேலம் ரயில்வே கோட்டத்துக்கு உள்பட்ட ரயில் நிலையங்களில் அக்டோபர் 1 முதல் 15-ஆம் தேதி வரை நடைபெற்ற சிறப்பு சோதனையில் பயணச்சீட்டு இல்லாமல் பயணித்தல் உள்ளிட்ட காரணங்களுக்காக ரூ.48.61 லட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

சேலம் ரயில்வே கோட்டத்துக்கு உள்பட்ட சேலம், ஈரோடு, கோவை உள்ளிட்ட நிலையங்களில் வழியாக இயக்கப்பட்ட ரயில்களில் ரயில்வே துறை அதிகாரிகள் சார்பில் சோதனை நடத்தப்பட்டு பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணிப்பவர்கள், முறையற்ற வகையில் பயணிப்பவர்கள், பதிவு செய்யாமல் சரக்குகளை ரயிலில் கொண்டு செல்பவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த அக்டோபர் 1 முதல் அக்டோபர் 15-ஆம் தேதி வரை 15 நாள்களில் சேலம் ரயில்வே கோட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணித்த 4,059 பேரிடம் இருந்து ரூ. 31 லட்சத்து 25 ஆயிரத்து 485 அபராதமாக வசூலிக்கப்பட்டது. ரயில்களில் முறையற்ற பயணம் மேற்கொண்டதாக 4,287 பேரிடம் இருந்து ரூ.17 லட்சத்து 14 ஆயிரத்து 300 அபராதமாக வசூலிக்கப்பட்டது.

ரயில்களில் பதிவு செய்யாமல் சரக்குகளைக் கொண்டு சென்றதாக, 44 பேரிடம் இருந்து ரூ.21 ஆயிரத்து 270 அபராதமாக வசூலிக்கப்பட்டது. அக்டோபர் 1 முதல் 15 -ஆம் தேதி வரை 15 நாள்களில் சேலம் ரயில்வே கோட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் மொத்தம் ரூ.48 லட்சத்து 61 ஆயிரத்து 55 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

ஊழியரிடம் நூதன மோசடி: தனியார் நிறுவன உரிமையாளர் மீது வழக்குப் பதிவு

கோவை, அக்.17: கோவையில் தனது நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியரின் ஆவணங்களைப் பயன்படுத்தி நூதன மோசடியில் ஈடுபட்ட உரிமையாளர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கோவை செட்டிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் நடராஜன் மகன் சாய் கணேஷ் (45). இவர் கோவை, ராமநாதபுரத்தில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் விற்பனை மேலாளராகப் பணியாற்றி வந்தார். அந்த நிறுவனத்தின் உரிமையாளரான கார்த்திக் கந்தசாமி, சாய் கணேஷின் பான் மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றுடன் அவரது விரல் ரேகை பதிவுகளையும் பயோ மெட்ரிக் இயந்திரம் மூலம் பெற்றுள்ளார். இந்நிலையில், சாய் கணேஷ் கடந்த மாதம் தனது வேலையை ராஜிநாமா செய்துள்ளார்.

அதன் பின்னர் தான் அந்த நிறுவனத்தில் பணியாற்றிய காலத்திற்கான வருங்கால வைப்பு நிதிக் கணக்கு தொடர்பாக சரிபார்த்த போது, அவரது கணக்கு வேறு ஒரு தனியார் நிறுவனத்தின் கணக்குடன் இணைக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

மேலும், தனது பெயரில் சிம் கார்டு ஒன்று வாங்கப்பட்டிருப்பதும், அதனைக் கொண்டு புதிதாக வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு, அதிலிருந்து பண பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதும் தெரியவந்தது.

இதையடுத்து தனது ஆவணங்களை வைத்து மோசடி செய்யப்பட்டுள்ளதாக, சாய் கணேஷ் ராமநாதபுரம் காவல் நிலையத்தில் புதன்கிழமை புகார் அளித்தார். இந்தப் புகாரின் பேரில், அந்த நிறுவனத்தின் உரிமையாளர் கார்த்திக் கந்தசாமி மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரிடியம் தருவதாக ரியல் எஸ்டேட் அதிபரிடம் ரூ.2 கோடி மோசடி:6 பேர் மீது வழக்குப் பதிவு

கோவை, அக்.17: இரிடியம் தருவதாகக் கூறி கோவையில் ரியல் எஸ்டேட் அதிபரிடம் ரூ.2 கோடி மோசடி செய்யப்பட்டது தொடர்பாக 6 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கேரள மாநிலம், பாலக்காடு, காரக்குறிச்சி பகுதியைச் சேர்ந்தவர் அப்துல் அஜீஸ் (55). ரியல் எஸ்டேட் அதிபரான இவர், மன்னார்காடு பகுதியில் விவசாயமும் செய்து வருகிறார். இவருக்கு நீலகிரி மாவட்டம், குன்னூர், கோத்தகிரி பகுதிகளைச் சேர்ந்தவர்களும் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுமான அபூபக்கர் (43), ஜான்பீட்டர் (45), செந்தில்ராஜ், ஜனகன், ஜோதிராஜ், அனில்குமார் ஆகியோருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

அவர்கள் தங்களுக்கு சொந்தமான நிலம் கோவையில் இருப்பதாகவும், அதை வாங்கிக் கொள்ளுமாறும் அப்துல் அஜீஸிடம் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அப்துல் அஜீஸ் அந்த நிலத்தைப் பார்ப்பதற்காக கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கோவைக்கு வந்துள்ளார்.

அப்போது அவர்கள், ஆர்.எஸ். புரம் பகுதியில் ஒரு வணிக வளாகம் அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு, நிலத்தைக் காட்டாமல், ஒரு பொருளைக் காட்டி தங்களிடம் ரூ.2 கோடி மதிப்பிலான இரிடியம் இருப்பதாகவும், அதை வாங்கி மீண்டும் விற்பனை செய்தால் ரூ.10 கோடி வரை விலை போகும் எனவும் தெரிவித்துள்ளனர். மேலும், பெரிய அளவில் லாபம் கிடைக்கும் என்பதால், அதை ஒரு பானையில் வைத்திருப்பதாகவும், அதை பத்திரமாக பாதுகாக்க வேண்டியிருக்கும் எனவும் கூறியுள்ளனர்.

இதை நம்பிய அப்துல் அஜீஸ், அந்த இரிடியத்தை தானே வாங்கிக் கொள்வதாகக் கூறி கடந்த ஆகஸ்ட் 28-ஆம் தேதி அவர்களிடம் ரூ.2 கோடி கொடுத்துள்ளார். அப்போது அவர்கள் இரிடியம் இருப்பதாக ஒரு சிறிய பானையைக் காட்டி, அதில் 100 சதவீத கதிரியக்க ஆற்றல் உள்ளதால், உடனடியாக அதிலிருந்து இரிடியத்தை எடுக்க முடியாது எனவும், அதை உரிய நாளில் மட்டும்தான் எடுக்கவேண்டும் எனவும் கூறி விட்டு, இந்த இரிடியம் அவரது வீட்டுக்கே வந்து சேரும் எனவும் கூறி பணத்துடன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் இரிடியத்தை தராததோடு, வாங்கிய பணத்தையும் திருப்பித் தரவில்லை.

இது தொடர்பாக ஆர்.எஸ்.புரம் காவல் நிலையத்தில் அப்துல் அஜீஸ் புதன்கிழமை புகார் அளித்தார். இந்த புகாரின்பேரில் போலீஸார், 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்து நடத்திய விசாரணையில் 4 பேர் பிடிபட்டுள்ளனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

NAME CHANGE

I, **YUWANESWARI NATARAJ**, S/o. Palanisamy, residing at No.8/2367 Sowdeswari Amman Kovil West, Pandian Nagar, Tiruppur-641 602, Tiruppur District, Tamilnadu hereby state that, my name **YUWANESWARI NATARAJ** shall hence forth be-Known as **YUWANESHWARI NATARAJ (Aadhaar No. 4596 8071 5110).**

Tiruppur 17.10.2024

தமிழ்நாடு கனிம நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
எண்.31, காமராஜர் சாலை, கோப்பக்கம், சென்னை-600005. தொலைபேசி: 044-28415003, 28511972
இ - ஒப்பந்தப்புள்ளி அழைப்பதற்கான அறிவிப்பு

1	ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் விவரம்	டாமின் சிவகங்கை கிராபைட் வெளிஃபிசியேஷன் தொழிற்சாலைக்கு நுகர்பொருட்கள் கொள்முதல் செய்தல்	டாமின் சிவகங்கை கிராபைட் கரும்பத்திற்கு பெடி பொருட்கள் கொள்முதல் செய்தல்
2	ஒப்பந்தப்புள்ளி கோப்பு எண் / தேதி	874/IU-1/2024 Dated.14.10.2024	852/ST-2/2024 Dated.10.10.2024
3	ஒப்பந்தப்புள்ளி ID எண்.	2024_TNMIN_494614_1	2024_TNMIN_494592_1
4	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்	05.11.2024, மாலை 02.00 மணி	
5	தொழில்நுட்ப உறை திறக்கும் நாள்	06.11.2024, மாலை 04.00 மணி	
6	ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை / EMD	ரூ.1000/- (ரூபாய் ஒராயிரம் மட்டும்) / ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் உள்ளபடி	ரூ.1000/- (ரூபாய் ஒராயிரம் மட்டும்) / ரூ.31,500/-

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு Tamilnadu e-tendering portal: https://tntenders.gov.in, www.tamingranites.com என்ற இணையத்தினை பார்வையிடவும்

பொது மேலாளர் (நிதி)

செ.ம.தொ.இ/4352/ஒப்பந்தப்புள்ளி/2024

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
தாராபுரம் நகராட்சி

ந.க.எண்.500/2023/எச்1 பின்னணு ஒப்பந்தப்புள்ளி - (இரு உறை முறை) - பொதுநிதி - 2024-2025 நாள் : 16.10.2024

1. தாராபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவை / ஒப்பந்ததாரர் தேர்வு செய்யும் பணி.
2. பணியின் மதிப்பீடு **ரூ.401.98 இலட்சம்.**
3. பணியின் டேவணித் தொகை மதிப்பீட்டு தொகைக்கு 1% ஒரு சதவீதம்.
4. ஒப்பந்தப்புள்ளி முன்னோடி ஆய்வுக்கூட்டம் **13.11.2024** அன்று **முற்பகல் 11.00** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
5. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விவரங்களை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
6. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **https://tntenders.gov.in.** என்ற இணையதள முகவரியில் **23.10.2024** முதல் **20.11.2024** அன்று **பிற்பகல் 3.00** மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
7. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்- **20.11.2024** அன்று **பிற்பகல் 3.00** மணி வரையில்
8. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: **20.11.2024** அன்று **பிற்பகல் 3.30** மணி, நகராட்சி அலுவலகம், தாராபுரம்.
9. ஒப்பந்தாரருக்கான குறுகிய விவரங்களை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
10. பணிக்கான முன்வைப்புத் தொகையினை **ஆணையாளர், தாராபுரம் நகராட்சி (The Commissioner, Dharapuram Municipality)** என்ற பெயரில் வங்கி வரைவோலையாக துளி உறையில் வைத்து **20.11.2024** அன்று **பிற்பகல் 3.00** மணிக்கு முன்பாக நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஆணையாளர், தாராபுரம் நகராட்சி

செ.எ.தொ.இ/ 4358 /ஒப்பந்தப்புள்ளி/2024

BHARAT HEAVY ELECTRICALS LIMITED
Tiruchirappali - 620014
(A Govt. of India Undertaking)

பழகுநர் பயிற்சி (Apprenticeship Training)

பிஹெச்இஎல், திருச்சி, **கைவினைஞர் (Trade-ITI), பட்டயம் (Diploma) & பட்டதாரி (Graduate)** பழகுநர்களை (Apprentices) பயிற்றுவிக்கும் செயல்முறையில் உள்ளது. விவரங்களுக்கு பிஹெச்இஎல் தொழிற்பயிற்சி இணையதளமான https://trichy.bhel.com -ஐப் பார்க்கவும்.

முக்கிய தேதிகள்
இணையவழி விண்ணப்பங்கள் துவங்கிய நாள்: 04.09.2024
இணையவழி விண்ணப்பங்களுக்கான இறுதி நாள்: 23.10.2024

முக்கியக் குறிப்பு: திருத்தங்கள் ஏதேனும் இருந்தால், மேலே உள்ள இணையதளத்தில் மட்டுமே அறிவிக்கப்படும் மற்றும் வேறு எந்த ஊடகத்திலும் வெளியிடப்படமாட்டாது.

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை-9

தமிழ்நாடு அரசின் 5 ஆண்டுகால பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.1000 கோடி மதிப்பில் ரூ.1000 கோடி மதிப்புள்ள 5 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/-க்கும் அதன் பின்னர் ரூ.10,000/-ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **அக்டோபர் 22, 2024** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் (இணைப்பு-II)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.
3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **அக்டோபர் 22, 2024** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:

அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.00** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.
5. ஏலத்தின் முடிவுகள் **அக்டோபர் 22, 2024** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **அக்டோபர் 23, 2024** அன்று வங்கிப் பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
6. தமிழ்நாடு அரசின் 5 ஆண்டுகால பிணையப் பத்திரம் ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை **ஏப்ரல் 23 மற்றும் அக்டோபர் 23, 2024** ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.
7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.
8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **அக்டோபர் 17, 2024, நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண். 746(L)/W&M-II/2024** – ஐக் காண்க.

த. உதயச்சந்திரன்
அரசு முதன்மை செயலாளர்
நிதித் துறை, சென்னை- 09.

செ.ம.தொ.இ./ 1056 /வரைகலை/2024

GLOBAL SAFETY ENTERPRISES
ADDRESSABLE FIRE ALARM
FIRE EXTINGUISHER
VALVES
HYDRANT SYSTEM
WHOLESALE & RETAIL
Chennai | Coimbatore
Tirupur | Bangalore
98406 55558, 98404 55557
E-mail: info@globalsafetys.in
Web: www.globalsafetys.in

FESTIVE COLLECTION
தீபாவளி புதிய வரவுகள்
காஞ்சிபுரம் | பனாரசி பட்டு, பேன்சி
காட்டன் புடவைகள்
பேன்சி பேப்ரிக்ஸ்
பேன்சி துப்பட்டாஸ்
சாப்ட் சில்க்ஸ் | சல்வார்ஸ்
குர்த்தீஸ் | டாப்ஸ்
லெஹங்காஸ் | காக்ராஸ் | ஷராரா
மஹாவீர்ஸ்
பட்டுக்கு ஓர் இலக்கணம்
காந்திபுரம். கோவை.
வேலட் பார்க்கிங் | ஞாயிறு விற்பனை உண்டு

IKF Home Finance
IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்
மனை எண் 30/A, சர்வே எண் 83/1, மை ஹோம் ட்வின்ஸ், 11வது தளம், பயனீர் ஹில்ஸ், ஜுப்பிளி அவென்யூ, 400/220/132KV GIS துணைநிலையம் அருகில், APIIC வைதராபாத் நாலெட்ஜ் சிட்டி, ஊட்டி, வைதராபாத்-081. தொ.பே.: 040-23412083, www.ikfhomefinance.com

அசையாச் சொத்துக்கான விற்பனை அறிவிப்பு
இணைப்பு-IV-A [பார்க்க விதி 8(6) அதனுடன் விதி 9(1)]

கடனீடுச் சொத்துக்களை சொக்கவாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீடுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழும் அதனுடன் கடனீடுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழும் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான E-ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும் முனைவகைம் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கும் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து IKF ஹோம் ஃபைனான்ஸ் லிட., நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ள நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு IKF ஹோம் ஃபைனான்ஸ் லிட., நிறுவனத்திடம் அடமானம் / ஆக்கு வைக்கப்பட்டுள்ளவையும் IKF ஹோம் ஃபைனான்ஸ் லிட., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **வலுவிழக்க** செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** என்கிற முறையில் e-ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்ட உள்ளன. கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், நிலுவைத் தொகை, அசையாச் சொத்துக்களின் கருக்கமான விவரம், தெரிந்த வரையிலான அவற்றின் விலைக்க விவரங்கள், கவாதின முறை, முன்னிடுப்பு விலை, டேவணித்தொகை, ஏல நாள் மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி : (1) திரு.அழகுராஜா.P, த/பெ. பெருமாள், (2) திருமதி.A.கந்தரி, க/பெ. அழகுராஜா.P, இருவரது குடியிருப்பு முகவரி : 25/32, 5வது தெரு, கரடங்காடு, தாராபுரம், மாகாளியம்மன் கோவில் அருகில், திருப்பூர் - 641604.
இன்னொரு முகவரி : 101, கரடங்காடு, 4,ஆவது வீதி, தாராபுரம் சாலை, திருப்பூர், தமிழ்நாடு - 641604.
**கடன் கணக